செ.வெ.எண். 796 நாள். 4.11.2009

செய்தி வெளியீடு – 4.11.2009

## வேலை வாய்ப்பற்ற படித்த இளைஞர்களுக்கான உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் குடும்ப வருமான வரம்பு ஆண்டுக்கு 24 ஆயிரம் ரூபாய் என்பது 50 ஆயிரம் ரூபாயாக உயர்வு!

## முதலமைச்சர் கலைஞர் ஆணை !

வேலை வாய்ப்பற்ற படித்த இளைஞர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டம் 2006இல் இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்படி, 10ஆம் வகுப்புவரை படித்தவர்களுக்கு மாதம் 150 ரூபாய் வீதமும், 12ஆம் வகுப்புவரை படித்தவர்களுக்கு மாதம் 200 ரூபாய் வீதமும், பட்டப் படிப்பு படித்தவர்களுக்கு மாதம் 300 ரூபாய் வீதமும் இந்த அரசினால் உதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்தின்கீழ் இதுவரை 3 இலட்சத்து 53 ஆயிரத்து 488 படித்து வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கு 156 கோடியே 15 இலட்சத்து 30 ஆயிரத்து 604 ரூபாய் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது. தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வரும் இத்திட்டத்தின்கீழ், மேலும் பல இளைஞர்கள் பயன்பெற வேண்டும் என்னும் நோக்கத்துடன், இத்திட்டத்தின் சலுகையை ஒரு பயனாளி பெற நிர்ணயிக்கப்பட்டுள்ள அவரது குடும்ப ஆண்டு வருமானம், ஆண்டுக்கு 24 ஆயிரம் ரூபாய் என்பதை 50 ஆயிரம் ரூபாய் என உயர்த்தி முதலமைச்சர் கலைஞர் இன்று (4.11.2009) ஆணையிட்டுள்ளார்.

• • •

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.